**பட்டியல் இனத்தவர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமைகள் தடுப்பு) சட்டத்தின் கீழான வழக்குகளை விசாரிப்பதற்கான எஎஎ சிறப்பு நீதிமன்றம், சேலம்.**

**முன்னிலை—திரு. சு. ஜெயசிங், B.Com., B.L.,**
**அமர்வு நீதிபதி,**
**பட்டியல் இனத்தவர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமைகள் தடுப்பு) சட்டத்தின்கீழான வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம், சேலம்.**

**2026—ஆம் வருடம் மார்ச் மாதம் 12 ஆம் நாள் வியாழக்கிழமை.**

## சிறப்பு அமர்வு வழக்கு எண்.10/2022
**(CNR No.TNSA25-000372-2024)**

| | | |
|---|---|---|
| **குற்றமுறையிடுபவர்** | : | தமிழ்நாடு அரசுக்காக,<br>காவல் உதவி ஆணையாளர்,<br>கொண்டலாம்பட்டி சரகம், சேலம் மாநகரம்.<br>கொண்டலாம்பட்டி காவல் நிலையம்,<br>குற்ற எண்.789/2021. |
| **எதிரிகளின் பெயர்** | : | 1. நாச்சியப்பன் (28/2022)<br>த/பெ. செல்வராஜ்,<br>கதவு எண்.1/173,<br>மாரியம்மன் கோவில் தெரு,<br>அம்மானிகொண்டலாம்பட்டி, சேலம் – 10.<br>2. வெங்கடேஷ் (26/2022)<br>த/பெ. தாதகவுண்டர்,<br>கதவு எண்.88டி,<br>கள்ளிக்கோட்டை மெயின் ரோடு,<br>ஜாரிகொண்டலாம்பட்டி,<br>சேலம். |

| | | |
|---|---|---|
| | | 3. மோகன்குமார் (எ) எம்.ஆர்.பி.மோகன் (27/2022)<br>த/பெ. ராஜி,<br>மாரியம்மன் கோவில் தெரு,<br>சின்ன கொண்டலாம்பட்டி,<br>சேலம்.<br>4. கார்த்திக் (எ) சின்னகார்த்திக் (24/2022)<br>த/பெ. செல்வம்,<br>கதவு எண்.165,<br>மாரியம்மன் கோவில் தெரு,<br>சின்ன கொண்டலாம்பட்டி,<br>சேலம்.<br>5. கார்த்திக் (எ) அக்னி கார்த்திக் (26/2022)<br>த/பெ. செல்வராஜ்,<br>காளியம்மன் கோவில் தெரு,<br>சின்ன கொண்டலாம்பட்டி,சேலம். |

| S.No | CASE SUMMARY | |
|---|---|---|
| i. | The period of remand of the Accused | A1 – 06.11.2021 to 29.11.2021,<br>A2 – 06.11.2021 to 29.11.2021,<br>A3 – 19.01.2022,<br>A4 – 04.02.2022,<br>A5 – 04.02.2022. |
| ii. | The date of filing of the complaint / final report in the Court | 01.03.2022 |
| iii. | The date of committal of the case to the Court of Session | -- |
| iv. | The date of questioning of A1 to A4 U/s- 228, 240, 246 and 251 CrPC as the case may be | U/s 228 of CrPC – 28.11.2024 |

| | | | | |
|---|---|---|---|---|
| v. | Filing of all miscellaneous petitions and their results including the results on challenge before superior Courts; except routine petitions like petitions U/s 317 of code | **CMP No.** | **Section / Prayer** | **Result** |
| | | CMP 4626/2021 of Principal Sessions Court, Salem. | Bail U/s 439 of CrPC filed by A1 and A2 | Allowed on 26.11.2021 |
| | | Crl.O.P.No.25724/ 2021 of Hon'ble High Court of Madras. | Petition U/s.482 of CrPC filed by A3 for direction | Allowed on 04.01.2022 |
| | | CMP.No. 258/2022 of Principal Sessions Court, Salem. | Surrender petition filed by A3 | Surrender of A3 Accepted on 19.01.2022 |
| | | CMP.No. 259/2022 of Principal Sessions Court, Salem. | Bail Application filed by A3 | Allowed on 19.01.2022 |
| | | CMP.No. 536/2022 of Principal Sessions Court, Salem. | Bail Application filed by A4 and A5 | Allowed on 04.02.2022 |
| | | CMP.No. 413/2024 of Special Court for trial of cases under SC and ST (PoA) Act, Salem. | Surrender petition filed by A5 | Surrender of A5 Accepted on 24.10.2024 |
| | | CMP.No. 412/2024 of Special Court for trial of cases under SC and ST (PoA) Act, Salem. | Advance hearing petition filed by A5 | Case advanced to 24.10.2024 |
| | | CMP.No. 413/2024 of Special Court for trial of cases under SC and ST (PoA) Act, Salem. | Warrant recall petition filed by A5 U/s. 70(2) of CrPC. | Petition allowed on 24.10.2024 |

<table>
<tr><td rowspan="11">vi.</td><td rowspan="11">Date of examination in-chief and cross-examination of a witness</td><td>Name of the Witnesses</td><td>Date of Chief Examination</td><td>Date of Cross Examination</td></tr>
<tr><td>PW1 Murugesan</td><td>23.09.2025</td><td>23.09.2025 by Prosecution</td></tr>
<tr><td>PW2 Kesavan</td><td>23.09.2025</td><td>23.09.2025 by Prosecution</td></tr>
<tr><td>PW3 Selvarajan</td><td>23.09.2025</td><td>23.09.2025 by Prosecution</td></tr>
<tr><td>PW4 Sivasakthi</td><td>23.09.2025</td><td>23.09.2025 by Prosecution</td></tr>
<tr><td>PW5 Sivanantham</td><td>23.09.2025</td><td>23.09.2025 by Prosecution</td></tr>
<tr><td>PW6 Shanmugam</td><td>23.09.2025</td><td>23.09.2025 by Prosecution</td></tr>
<tr><td>PW7 Govindan</td><td>07.10.2025</td><td>07.10.2025</td></tr>
<tr><td>PW8 Mariappan</td><td>25.10.2025</td><td>25.10.2025 by Prosecution</td></tr>
<tr><td>PW9Thamayanthira ni</td><td>17.12.2025</td><td>--</td></tr>
<tr><td>PW10 Albert</td><td>02.03.2026</td><td>02.03.2026</td></tr>
<tr><td>Vii.</td><td>Date of examination of the Accused under Section 313 of Code</td><td colspan="3">05.03.2026</td></tr>
<tr><td>Viii.</td><td>Details of abscondence of an Accused and his appearance/production, as the case may be</td><td colspan="3">A5 – 22.07.2024 to 23.10.2024</td></tr>
<tr><td>ix.</td><td>Grant of stay by superior Courts and the results thereof</td><td colspan="3">NIL</td></tr>
<tr><td colspan="2">முதலாவது குற்றச்சாட்டு</td><td colspan="3">1 முதல் 5 எதிரிகள் மீது – பட்டியல் இனத்தவர் மற்றும் பழங்குடியினர் என்பது தெரிந்திருந்தும், பொது பார்வையில் சாதி பெயரை சொல்லி கெட்டவார்த்தையால் திட்டி இழிவு படுத்துதல் – பட்டியல் இனத்தவர்</td></tr>
</table>

| | |
|---|---|
| | மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமைகள் தடுப்பு) சட்டப்பிரிவு 3(1)(r),(s)ன் படி |
| இரண்டாவது குற்றச்சாட்டு | 1 முதல் 5 எதிரிகள் மீது – கலகம் செய்யும் நோக்கத்தோடு சட்ட விரோதமாக அபாயகரமான ஆயுத்தோடு ஒன்று கூடிய குற்றம் – இதச பிரிவு 148 படி |
| மூன்றாவது குற்றச்சாட்டு | 1 வது எதிரி மீது – கொடிய ஆயுதத்தால் தாக்கி சாதாரணக் காயம் ஏற்படுத்துதல் – இதச பிரிவு 324ன் படி |
| நான்காவது குற்றச்சாட்டு | 1 முதல் 5 எதிரிகள் மீது – குற்ற எண்ணத்துடன் தடுத்து நிறுத்திய குற்றத்திற்காக – இதச பிரிவு 341 படி |
| ஐந்தாவது குற்றச்சாட்டு | 1 முதல் 5 எதிரிகள் மீது – பட்டியல் இனத்தவர் மற்றும் பழங்குடியினர் என்பது தெரிந்திருந்தும், பட்டியலில் கண்ட இதச பிரிவுகள் படியான குற்றங்களை செய்தல் – பட்டியல் இனத்தவர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமைகள் தடுப்பு) சட்டப்பிரிவு 3 (2) (va)ன் படி |
| 1 முதல் 5 எதிரிகளின் பதில் | பொய் வழக்கு |
| நீதிபதியின் தீர்மானம் | 1வது எதிரி மீதான பட்டியல் இனத்தவர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமைகள் தடுப்பு) சட்டப்பிரிவுகள் 3(1)(r), (s), இதச பிரிவுகள் 148, 324, 341 மற்றும் பட்டியல் இனத்தவர் மற்றும் பழங்குடியினர் வன்கொடுமைகள் தடுப்பு சட்டப்பிரிவு 3 (2) (va)ன் படியும், 2 முதல் 5 எதிரிகள் மீதான பட்டியல் இனத்தவர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமைகள் தடுப்பு) சட்டப்பிரிவுகள் 3(1)(r), (s), இதச பிரிவுகள் 148, 341 மற்றும் பட்டியல் இனத்தவர் மற்றும் பழங்குடியினர் வன்கொடுமைகள் தடுப்பு |

| | |
|---|---|
| | சட்டப்பிரிவு 3 (2) (va)ன் படியுமான குற்றச்சாட்டுகள் தகுந்த சாட்சிய சான்றாவணங்கள் மூலம் சந்தேகத்திற்கு இடமற்ற வகையில் நிரூபிக்கப்படவில்லை. |
| தண்டனை (அ) உத்தரவு | 1வது எதிரி மீதான பட்டியல் இனத்தவர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமைகள் தடுப்பு) சட்டப்பிரிவுகள் 3(1)(r), (s), இதச பிரிவுகள் 148, 324, 341 மற்றும் பட்டியல் இனத்தவர் மற்றும் பழங்குடியினர் வன்கொடுமைகள் தடுப்பு சட்டப்பிரிவு 3 (2) (va)ன் படியும், 2 முதல் 5 எதிரிகள் மீதான பட்டியல் இனத்தவர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமைகள் தடுப்பு) சட்டப்பிரிவுகள் 3(1)(r), (s), இதச பிரிவுகள் 148, 341 மற்றும் பட்டியல் இனத்தவர் மற்றும் பழங்குடியினர் வன்கொடுமைகள் தடுப்பு சட்டப்பிரிவு 3 (2) (va)ன் படியுமான குற்றச்சாட்டுகள் தகுந்த சாட்சிய சான்றாவணங்கள் மூலம் சந்தேகத்திற்கு இடமற்ற வகையில் நிரூபிக்கப்படவில்லை என்று முடிவு செய்து சந்தேகத்தின் பலனை 1 முதல் 5 எதிரிகளுக்கு வழங்கி 1 முதல் 5 எதிரிகளை குவிமுச பிரிவு 235(1) பிரிவின் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. 1 முதல் 5 எதிரிகளால் எழுதிக் கொடுக்கப்பட்டிருக்கும் பிணை பத்திரங்களை ரத்து செய்யவும் உத்தரவிடப்படுகிறது. இவ்வழக்கில் அரசு தரப்பில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள சேலம் முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்ற சி.பி எண் 55/2021 |

| | |
|---|---|
| | ல் உள்ள வழக்கு சொத்தான பாதி உடைந்த பீர்பாட்டில் (அதசாபொ.1) பயனற்றது. எனவே அதனை மேல் முறையீட்டு காலத்திற்கு பின் அழித்து விடவும் உத்தரவிடப்படுகிறது. |

இவ்வழக்கு என் முன்பாக இன்று முடிவான விசாரணைக்கு கொண்டுவரப்பட்டு, குற்றமுறையீடுபவரான அரசுக்காக திரு.S. இசைஅமுதன், அரசு சிறப்பு வழக்கறிஞர் அவர்களும், 1 முதல் 5 எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. D. மனுவேல் அவர்கள் முன்னிலையாகியும், எடுத்துரைத்த இரு தரப்பு வாதங்களைக் கேட்டும், அரசு தரப்பில் முன்னிடப்பட்ட ஆவண மற்றும் வாய்மொழி சாட்சியங்கள் பரிசீலிக்கப்பட்டு, இன்று வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்து வந்த இவ்வழக்கில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.

## தீர்ப்புரை

**சேலம் மாவட்டம், கொண்டலாம்பட்டி சரகம் காவல் உதவி ஆணையாளர் தாக்கல் செய்த வழக்கின் சுருக்கம்**:–

இவ்வழக்கின் புகார்தாரர் முருகேசன் த/பெ. சிவகுமார் என்பவர் பட்டியல் இனத்தை சார்ந்த ஆதிதிராவிடர் வகுப்பை சார்ந்தவர். அவர் 05.11.2021 தேதி மாலை சுமார் 04.00 மணியளவில் அவர் நடத்தி வரும் அட்சயா பனியன் கம்பெனியிலிருந்து கிளம்பி கொண்டலாம்பட்டி

பைபாசில் இருந்த அவரது வீட்டிற்கு செல்வதற்காக சின்னகொண்டலாம்பட்டி சுடுகாடு தகனமேடை அருகே தன்னுடைய பைக்கில் சென்று கொண்டிருந்த போது அங்கு வந்த 1 முதல் 5 எதிரிகள் குடிபோதையில் கையில் பீர் பாட்டிலுடன் சட்ட விரோத கூட்டமாக ஒன்றுகூடி அவரை அவரது வீட்டிற்கு செல்லவிடாமல் வழிமறித்து தடுத்து நிறுத்தி 1ஆம் எதிரி அவரை பார்த்த நீ வண்டியில் போகும் போது வண்டியின் ஹாரனை அடிக்காமல் தான் போகனும் பறபுண்டை உனக்கு தெரியாதா என்றும் 2 முதல் 5 எதிரிகள் அவரை பார்த்து பறபுண்டை உனக்கு தெரியாத என்றும் அவரை அவரது சாதி பெயரை சொல்லி திட்டி இழிவுபடுத்திய போது, அவர் 1ஆம் எதிரியை பார்த்து ஏன் இப்படி பேசுகிறீர்கள் என்று கேட்ட போது 1ஆம் எதிரி தன் கையில் வைத்திருந்த பீர் பாட்டிலால் அவரது இடது கண் புருவத்தில் ஓங்கி அடித்து அவருக்கு சொற்ப காயத்தை ஏற்படுத்தியதாக குறிப்பிட்டு 1 முதல் 5 எதிரிகளுக்கு எதிராக இதச பிரிவுகள் 147, 148, 341, 294(b), 324 மற்றும் பட்டியல் இனத்தவர் மற்றும் பழங்குடியினர் வன்கொடுமைகள் தடுப்பு சட்டப்பிரிவுகள் 3(1) (r), 3(1) (s) &3 (2) (va)ன் படியுமான இறுதி

அறிக்கையை கொண்டலாம்பட்டி சரக காவல் உதவி ஆணையாளர் சேலம் முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார்.

2. இவ்வழக்கின் புலன் விசாரணை முடித்து இறுதியறிக்கையானது சேலம், முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட பிறகு, மேற்படி வழக்காவணங்களை பரிசீலனை செய்து, மேற்படி வழக்கானது சேலம், முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றத்தால் Spl.SC.No.10/2022 எனக் கோப்பிற்கு எடுக்கப்பட்டு, 1 முதல் 5 எதிரிகள் மேற்படி நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளார்கள். அவர்களுக்கு அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்காவணங்களின் நகல்கள் அனைத்தும் கு.வி.மு.ச பிரிவு 207ன் படிக்கு இலவசமாக வழங்கப்பட்டுள்ளது.

3. இந்நிலையில், வன்கொடுமை தடுப்பு சட்டப்படி பதிவு செய்யப்பட்ட வழக்குகளை விசாரிப்பதற்கு இந்த சிறப்பு நீதிமன்றம் துவங்கப்பட்ட காரணத்தினால், மேற்படி வழக்கு கோப்பானது இந்நீதிமன்றத்திற்கு மாற்றம் செய்யப்பட்டு, Spl.SC.No.10/2022 என அதே எண்ணில் தொடர்ந்து விசாரணை செய்யப்பட்டுள்ளது.

4. 1 முதல் 5 எதிரிகள் இந்நீதிமன்றத்தில் முன்னிலையான பின்னர், அரசு தரப்பினர், 1 முதல் 5 எதிரிகள் தரப்பினர் இரு சாராருக்கும் அளிக்க

வேண்டிய சந்தர்ப்பம் அளிக்கப்பட்டு, இவ்வழக்காவணங்களை பரிசீலனை செய்ததில் எதிரி குற்றம் புரிந்திருப்பார்கள் என்று கருதவும், கருத்தில் கொண்டு வழக்கு நடவடிக்கைகளை செயலாற்றவும், வழிவகுப்பனவாக இருந்தமையால் 1வது எதிரி மீது பட்டியல் இனத்தவர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமைகள் தடுப்பு) சட்டப்பிரிவுகள் 3 (1) (r), (s), இதச பிரிவுகள் 148, 324, 341 மற்றும் பட்டியல் இனத்தவர் மற்றும் பழங்குடியினர் வன்கொடுமைகள் தடுப்பு சட்டப்பிரிவு 3 (2) (va)ன் படியும், 2 முதல் 5 எதிரிகள் மீது பட்டியல் இனத்தவர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமைகள் தடுப்பு) சட்டப்பிரிவுகள் 3 (1) (r), (s), இதச பிரிவுகள் 148, 341 மற்றும் பட்டியல் இனத்தவர் மற்றும் பழங்குடியினர் வன்கொடுமைகள் தடுப்பு சட்டப்பிரிவு 3 (2) (va)ன் படியுமான குற்றச்சாட்டுகள் வனைந்து விளக்கி வினவ, 1 முதல் 5 எதிரிகள் தாங்கள் குற்றவாளிகள் இல்லை என குற்றத்தையும் குற்றச்சாட்டையும் மறுத்து விசாரணை வேண்டினர்.

5. இவ்வழக்கில் அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.10 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு அரசு தரப்பு சான்றாவணங்கள் அ.த.சா.ஆ.1 முதல் அ.த.சா.ஆ.15 வரிசை மற்றும் சான்று பொருள் அதசாபொ.1 குறியீடு செய்யப்பட்டுள்ளது.

6. **<u>அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் வாயிலாக எழும் அரசு தரப்பு வழக்கின் சுருக்கமாவது</u>**:

அ.சா.1 முருகேசன் தனது சாட்சியத்தில் தான் ஆதிதிராவிடர் பட்டியல் இனத்தை சார்ந்தவர் என்றும் 2021ஆம் வருடத்தில் ஒரு நாள் இருசக்கர வாகனத்திலிருந்து தவறி கீழே விழுந்து ஏற்பட்ட காயத்திற்கு சிகிச்சை பெறுவதற்காக சேலம் அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சை பெற்றதாகவும் தன்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள அ.த.சா.ஆ.1 கையொப்பத்தை போலீசார் தன்னிடம் வெற்று தாளில் பெற்றுக் கொண்டார்கள் என்றும் எதற்காக அந்த கையொப்பத்தை பெற்றார்கள் என்று தனக்கு தெரியாது என்றும் கூறினார். அ.சா.2 கேசவன், அ.சா.3 செல்வராஜன், அ.சா.8 மாரியப்பன் ஆகியோர் தங்களுக்கு 1 முதல் 5 எதிரிகளை தெரியாது என்றும் வழக்கு சம்மந்தமாக எதுவும் தெரியாது என்றும் கூறினர். அ.சா.4 சிவசக்தி தனக்கு 1 முதல் 5 எதிரிகளை தெரியாது என்றும் தனது அண்ணனான அ.சா.1 இருசக்கர வாகனத்தில் சென்ற போது கீழே விழுந்து காயம்பட்டு சேலம் அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தார் என்றும் அவரை மருத்துவமனைக்கு சென்று பார்த்த போது அவருக்கு இடது கண்புருவத்தில் அடிப்பட்டிருந்ததாகவும் வழக்கு சம்மந்தமாக வேறு

எதுவும் தெரியாது என்றும் கூறினார். அ.சா.5 சிவானந்தம் தனது சாட்சியத்தில் தன்னிடம் காட்டப்படும் பார்வை மகஜர் மற்றும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள முதல் சாட்சி கையொப்பத்தை சுமார் 4 வருடங்களுக்கு முன்பு கொண்டலாம்பட்டி காவல் நிலையத்தில் வைத்து போலீசார் தன்னிடம் பெற்றுக் கொண்டார்கள் என்றும் எதற்காக இந்த கையொப்பத்தை தன்னிடம் பெற்றார்கள் என்று தனக்கு தெரியாது என்றும் கூறினார். பார்வை மகஜரில் உள்ள அ.சா.5ன் கையொப்பம் மட்டும் அ.த.சா.ஆ.2. கைப்பற்றுதல் மகஜரில் உள்ள அ.சா.5ன் கையொப்பம் மட்டும் அ.த.சா.ஆ.6. அ.சா.6 சண்முகம் தனது சாட்சியத்தில் தன்னிடம் காட்டப்படும் பார்வை மகஜர் மற்றும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பத்தை சுமார் 4 வருடங்களுக்கு முன்பு கொண்டலாம்பட்டி காவல் நிலையத்தில் வைத்து போலீசார் தன்னிடம் பெற்றுக் கொண்டார்கள் என்றும் எதற்காக இந்த கையொப்பத்தை தன்னிடம் பெற்றார்கள் என்று தனக்கு தெரியாது என்றும் கூறினார். பார்வை மகஜரில் உள்ள அ.சா.6ன் கையொப்பம் மட்டும் அ.த.சா.ஆ.4. கைப்பற்றுதல் மகஜரில் உள்ள அ.சா.6ன் கையொப்பம் மட்டும் அ.த.சா.ஆ.5. அ.சா.1 முதல் அ.சா.6 மற்றும் அ.சா.8 ஆகியோர் அரசு

தரப்பில் பிறழ் சாட்சிகளாக பாவித்து, குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதி கேட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

7. அ.சா.7 கோவிந்தன் அவரது சாட்சியத்தில் தான் 05.11.2021ம் தேதி கொண்டலாம்பட்டி காவல் நிலையத்தில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளராக பணியிலிருந்த போது இரவு 8.00 மணியளவில் சேலம் அரசு மருத்துவமனையிலிருந்து முருகேசன் என்பவரின் தகவல் பெற்று இரவு 9.00 மணிக்கு சேலம் அரசு மருத்துவமனைக்கு சென்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த முருகேசன் த/பெ. சிவக்குமார் என்பவரை விசாரித்து அவர் கொடுத்த புகார் வாக்குமூலத்தை பதிவு செய்து நிலையம் திரும்பி வந்து புகார் வாக்குமூலத்தின் தன்மைக்கு ஏற்ப நிலைய குற்ற எண்789/2021 ச.பி. 147, 148, 294(பி), 324 இதச மற்றும் 3(1) (r), 3 (1) (s), 3(2) (va) SC/ST (PoA) Act 1989 படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ததாகவும் புகார் வாக்குமூலம் அ.தசா.ஆ.6 என்றும் முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ.7 என்றும் முதல் தகவல் அறிக்கை அசல் மற்றும் புகார் வாக்குமூலத்தை இணைத்து சேலம் முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றத்திற்கு அனுப்பியதாகவும் மற்ற முதல் தகவல் அறிக்கை நகல்களை சம்மந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பியதாகவும் வழக்கை புலன் விசாரணை செய்ய அதிகாரியை நியமனம் செய்ய வேண்டி சேலம் மாநகர காவல் துணை ஆணையாளர் அவர்களுக்கு

முதல் தகவல் அறிக்கை நகலுடன் வேண்டுகோள் கடிதத்தை அனுப்பி வைத்ததாகவும் கூறியுள்ளார்.

8. அ.சா.9 தமயந்திராணி தனது சாட்சியத்தில் தான் கடந்த 05.11.2021–ஆம் தேதியன்று மாலை 05.20 மணிக்கு சேலம் அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவமனையில் அவசர சிகிச்சை பிரிவில் உதவி மருத்துவராக பணியில் இருந்தபோது சேலம் அமானி கொண்டலாம்பட்டி ஆதிதிராவிடர் தெருவை சேர்ந்த சிவகுமார் மகன் முருகேசன் என்பவர் சிகிச்சைக்காக வந்ததாகவும் அவரை விசாரித்தபோது அவர் தன்னை தெரிந்த இரண்டு நபர்கள் மற்றும் தெரியாத மூன்று நபர்கள் 05.11.2021–ஆம் தேதி மாலை 04.00 மணிக்கு செலவுமேடு என்ற இடத்தில் வைத்து பாட்டில் மற்றும் வண்டி சாவியால் தாக்கியதாக கூறினார் என்றும் தான் அவரின் காயத்தை குறித்து விபத்து பதிவேட்டில் பதிவுசெய்து உள் நோயாளியாக அனுமதித்ததாகவும் அவருக்கு இடது புருவத்தில் 1 செ.மீ. அளவில் தையல் இட்ட காயம் இருந்தது என்றும் அவர் வேறொரு தனியார் மருத்துவமனையில் அந்த காயத்திற்கு தையல் இட்டு சிகிச்சை பெற்றுள்ளார் என்றும் அந்த நபருக்கு தீபக் என்ற மருத்துவர் சிகிச்சை வழங்கியுள்ளார் என்றும் அவர் கொடுத்த கருத்துரையின் அடிப்படையில் அந்த நபருக்கு ஏற்பட்ட காயம் சாதாரணமானது என்று கருத்துரைத்து விபத்து பதிவேடு நகல் வழங்கியதாகவும், காயம் குறித்த மருத்துவ கருத்துரையுடன் கூடிய விபத்து பதிவேடு நகல் அ.த.சா.ஆ–8 என்றும் அந்த நபர் சொன்ன விதத்தில், சொன்ன

நேரத்தில் பீர் பாட்டில் மற்றும் வண்டி சாவியால் தாக்கும்போது அந்த நபரிடம் இருந்த காயம் ஏற்பட்டிருக்க வாய்ப்புள்ளது என்றும் கூறியுள்ளார்

9. அ.சா.10 ஆல்பர்ட் தனது சாட்சியத்தில் தான் சேலம் மாநகரம், கொண்டலாம்பட்டி சரகம் காவல் உதவி ஆணையாளராக பணியிலிருந்த போது கொண்டலாம்பட்டி காவல் நிலைய குற்ற எண்.789/2021 ச.பி. 147, 148, 341, 294(b) இதச 3(1)(r), 3(1)(s), 3(2)(va)பட்டியல் இனத்தவர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமை தடுப்பு) சட்டப்படியான வழக்கை சேலம் மாநகர தெற்கு காவல் துணை ஆணையாளர் அவர்களின் C.No.10/SC&ST Act/DC(L&O)/SLM(C)/2021 dated 05.11.2021 படியான செயல்முறை ஆணைப்படி வழக்கை நான் புலன்விசாரணைக்கு எடுத்துக் கொண்டதாகவும் சேலம் மாநகர தெற்கு காவல் துணை ஆணையாளர் அவர்களின் C.No.10/SC&ST Act/DC(L&O)/SLM(C)/2021 dated 05.11.2021 படியான செயல்முறை ஆணை அ.த.சா.ஆ.9 என்றும் 06.11.2021 தேதி அதிகாலை 00.15 மணியளவில் சம்பவம் இடம் சென்று சாட்சிகள் சிவானந்தம், சண்முகம் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயாரித்ததாகவும் பார்வை மகஜரில் சாட்சிகளின் கையொப்பம் பெற்றதாகவும் பார்வை மகஜர் அ.த.சா.ஆ.10 என்றும் மாதிரி வரைபடம் அ.த.சா.ஆ.11 என்றும் சம்பவ இடத்தில் கிடந்த எதிரிகளால் அடிக்கப் பயன்படுத்தப்பட்ட உடைந்து போன பீர்பாட்டில் ஒன்றை அதே சாட்சிகள் சிவானந்தம், சண்முகம் ஆகியோர் முன்னிலையில் மகஜர்

மூலம் கைப்பற்றியதாகவும் கைப்பற்றுதல் மகஜர் அ.த.சா.ஆ.12 என்றும் உடைந்து போன பீர் பாட்டில் அ.த.சா.பொ.1 என்றும் சாட்சிகள் சிவானந்தம், சண்முகம் ஆகியோரையும் காயம்பட்ட முருகேசன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும் அதே நாளில் சாட்சிகள் கேசவன், மாரியப்பன், செல்வராசன், சிவசக்தி ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும் கூறியுள்ளார்.

10. அ.சா.10 ஆல்பர்ட் மேலும் தனது சாட்சியத்தில் 05.11.2021 மாலை சுமார் 04.00 மணிக்கு சாட்சிகள் அடையாளம் காட்ட எதிரி நாச்சியப்பன் (1வது எதிரி), வெங்கடேஷ் (2வது எதிரி) ஆகியோரை கொண்டலாம்பட்டி மார்கெட் பகுதியில் வைத்து கைது செய்து முறைப்படி நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்ததாகவும் கைப்பற்றப்பட்ட பீர்பாட்டிலை படிவம் 91 மூலம் நீதிமன்ற பொறுப்புக்கு அனுப்பி வைத்ததாகவும் படிவம் 91 அ.த.சா.ஆ.13 என்றும் பிறகு சேலம் தெற்கு வட்டாட்சியர் அவர்களிடம் வாதி முருகேசன் த/பெ. சிவகுமார் என்பவருக்கும் 1வது எதிரி நாச்சியப்பன் என்ற சோடாக்காரன் த/பெ. செல்வராஜ், 2வது எதிரி வெங்கடேஷ் த/பெ. தாதக்கவுண்டர், 3வது எதிரி எம்.ஆர்.பி. மோகன் த/பெ. ராஜு, 4வது எதிரி சின்னவன் கார்த்திக் த/பெ. செல்வம், 5வது எதிரி கார்த்தி என்ற அக்னிகார்த்தி த/பெ. செல்வராஜ் ஆகியோருக்கு சாதி சான்றிதழ் வழங்கும் படி வேண்டுகோள் கடிதம் அனுப்பி வைத்ததாகவும் அதன்படி வாதி முருகேசன் த/பெ. சிவகுமார் என்பவர் சம்மந்தமாக சேலம் தெற்கு வட்டாட்சியர்

திருமதி. முத்துலட்சுமி என்பவர் கொடுத்த சாதி சான்றிதழையும் 1 முதல் 5 எதிரிகள் சம்மந்தமாக சேலம் தெற்கு தலைமையிடத்து துணை வட்டாட்சியர் திரு. வைத்திலிங்கம் என்பவர் கொடுத்த சாதி சான்றிதழ்களையும் பெற்று சேலம் தெற்கு வட்டாட்சியர் திருமதி. முத்துலட்சுமி மற்றும் சேலம் தெற்கு தலைமையிடத்து துணை வட்டாட்சியர் திரு. வைத்திலிங்கம் ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும் வாதி முருகேசன் த/பெ. சிவகுமார் என்பவர் சம்மந்தமான சாதி சான்றிதழ் அ.த.சா.ஆ.14 என்றும் 1 முதல் முதல் 5 எதிரிகளின் சாதி சான்றிதழ்கள் அ.த.சா.ஆ.15 வரிசை என்றும் 14.02.2022 தேதி வாதி முருகேசனை சேலம் அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சைக்கு அனுமதித்த அவசர சிகிச்சை பிரிவு மருத்துவர் திரு. தீபக் அவர்களையும் சிகிச்சை வழங்கிய சேலம் அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவ கல்லூரி மருத்துவமனை மருத்துவர் திரு. தமயந்திராணி என்பவரையும் விசாரித்து காயச்சான்றிதழ் பெற்று வாக்குமூலம் பதிவு செய்ததாகவும் அன்றைய தினமே புலன்விசாரணை முடித்து 1 முதல் 5 எதிரிகளுக்கு எதிராக ச.பி. 147, 148, 341, 294(b), 324 இதச 3(1)(r), 3(1)(s), 3(2)(va)பட்டியல் இனத்தவர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமை தடுப்பு) சட்டப்படியான இறுதி அறிக்கையை நீதிமன்றத்தில் சமர்ப்பித்ததாகவும் சாட்சிகள் தன்னிடம் சொன்னதை தான் வாக்குமூலங்களாக பதிவு செய்தேன்

என்றும் கூறியுள்ளார். அ.சா.10–ன் சாட்சியத்துடன் அரசு தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

11. மேற்கண்ட அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து 1 முதல் 5 எதிரிகளுக்கு பாதகமாக அமைந்துள்ள சங்கதிகளை குறித்து குவிமுச பிரிவு 313(1)(ஆ)ன் படி 1 முதல் 5 எதிரிகளிடம் எடுத்துக்கூறி வினவியபோது, 1 முதல் 5 எதிரிகள் மேற்படி சாட்சியங்களை மறுத்து பொய் சாட்சியம் என்று கூறினார்கள். 1 முதல் 5 எதிரிகள் தரப்பில் விசாரிக்க சாட்சிகள் ஏதும் இல்லை என்று கூறியதால் 1 முதல் 5 எதிரிகள் தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

12. இரு தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. இரு தரப்பு சாட்சிய சான்றாவணங்கள் மற்றும் வழக்கு கோப்பு பரிசீலிக்கப்பட்டது.

13. இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில் 1 முதல் 5 எதிரிகள் மீதான குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் தக்க சாட்சிய சான்றாவணங்கள் வாயிலாக சந்தேகத்திற்கு இடமற்ற வகையில் நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதே ஆகும்.

**<u>14. தீர்வு:–</u>**

இவ்வழக்கானது அ.சா.1 முருகேசன் 05.11.2021 தேதி கொண்டலாம்பட்டி காவல் நிலைய சிறப்பு காவல் உதவி ஆய்வாளராக

பணியிலிருந்த அ.சா.7 கோவிந்தன் என்பவர் நிலைய அலுவலில் இருந்த போது சேலம் அரசு மருத்துவமனையிலிருந்து கிடைக்கப் பெற்ற அ.சா.1 முருகேசன் என்பவரின் காயத் தகவல் அடிப்படையில் அம்மருத்துவமனைக்கு சென்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த அ.சா.1 முருகேசன் என்பவரை விசாரித்த போது அவர் கொடுத்த அ.த.சா.ஆ.6 புகார் வாக்குமூலத்தை பதிவு செய்து, நிலையம் திரும்பி வந்து அன்று 22.30 மணியளவில் புகார் வாக்குமூலத்தின் தன்மைக்கு ஏற்ப கொண்டலாம்பட்டி காவல் நிலைய குற்ற எண்.789/2021 ச.பி. 147, 148, 341, 294(b), 324 இதச உ/இ 3 (1) (r), 3 (1) (s), 3 (2) (va) பட்டியல் இனத்தவர் மற்றும் பழங்குடியினர்(வன்கொடுமைகள் தடுப்பு) சட்டப்படி பதிவு செய்த அ.த.சா.ஆ.7–முதல் தகவல் அறிக்கைபடி துவங்கியுள்ளது.

15. கற்றறிந்த அரசு சிறப்பு வழக்கறிஞர், இவ்வழக்கின் வாதியான அ.சா.1 முருகேசன் மற்றும் சம்பவ சாட்சிகள் அ.சா.2, அ.சா.3, அ.சா.4 மற்றும் அ.சா.8 ஆகியோரும் பார்வை மகஜர் மற்றும் கைப்பற்றுதல் மகஜர் சம்மந்தமான சாட்சிகளான அ.சா.5 சிவானந்தம் மற்றும் அ.சா.6 சண்முகம் ஆகியோரும் பிறழ்சாட்சிகளாக மாறி இருப்பினும் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் அ.சா.7 கோவிந்தன்,

அ.சா.1க்கு சிகிச்சை வழங்கிய மருத்துவர் அ.சா.9 தமயந்திராணி மற்றும் புலனாய்வு அலுவலரான கொண்டலாம்பட்டி சரக காவல் உதவி ஆணையாளர் அ.சா.10 ஆல்பர்ட் ஆகியோரின் சாட்சியம் 1 முதல் 5 எதிரிகள் மீதான குற்றத்தை நிரூபிக்கும் வகையில் அமைந்துள்ளதாகவும் இவ்வழக்கில் பாதிக்கப்பட்ட அ.சா.1 பட்டியல் இனத்தை சார்ந்தவர் என்பதும் 1 முதல் 5 எதிரிகள் பட்டியல் இனம் அல்லாத சமூகத்தை சார்ந்தவர்கள் என்பதும் 1 முதல் 5 எதிரிகள் தரப்பில் மறுக்கப்படவில்லை என்றும் எனவே 1 முதல் 5 எதிரிகளுக்கு உரிய தண்டனை வழங்க வேண்டும் என்றும் வாதிட்டார்.

16. 1 முதல் 5 எதிரிகள் எந்த குற்றமும் புரியவில்லை என்றும் 1 முதல் 5 எதிரிகளுக்கு எதிராக குற்றச்சாட்டிற்கு உரிய ஆதாரம் இல்லை என்றும் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் அ.சா.7, அ.சா.1க்கு சிகிச்சை வழங்கிய மருத்துவர் அ.சா.9 மற்றம் புலனாய்வு அலுவலர் அ.சா.10 ஆகியோரின் சாட்சியத்தை மட்டும் கருத்தில் கொண்டு 1 முதல் 5 எதிரிகளுக்கு எதிரான குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டுள்ளதாக முடிக்குவர இயலாது என்றும் எனவே 1 முதல் 5

எதிரிகளை குற்றவாளிகள் அல்ல என்று தீர்மானித்து 1 முதல் 5 எதிரிகளை விடுதலை செய்து தீர்ப்பளிக்க வேண்டும் என்றும் வாதிட்டார்.

17. இவ்வழக்கின் வாதியான அ.சா.1 முருகேசன், இந்து ஆதிதிராவிடர் எனும் பட்டியல் இனத்தை சார்ந்தவர் என்பது சேலம் தெற்கு வருவாய் வட்டாட்சியர் வழங்கிய அ.த.சா.ஆ.14 ஜாதி சான்றிதழ் மூலமும் 1 முதல் 5 எதிரிகள், பட்டியல் இனம் அல்லது பழங்குடி இனம் அல்லாத வகுப்பை சார்ந்தவர்கள் என்பது சேலம் தெற்கு வருவாய் வட்டாட்சியர் அலுவலத்தில் தலைமையிடத்து துணை வட்டாட்சியர் வழங்கியுள்ள அ.த.சா.ஆ.15 வரிசை சாதி சான்றிதழ்கள் மூலமும் அரசு தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளது. அது சம்மந்தமாக 1 முதல் 5 எதிரிகள் தரப்பில் எந்த ஆட்சேபனையும் தெரிவிக்கப்படவில்லை.

18. இவ்வழக்கில் சம்பவத்தில் பாதிக்கப்பட்ட சாட்சியாக விசாரிக்கப்பட்ட அ.சா.1 முருகேசன் என்ற நிகழ்நிலை புகார்தாரர் மற்றும் சம்பவ சாட்சிகள் அ.சா.2 முதல் அ.சா.4 மற்றும் அ.சா.8 ஆகியோரும் சம்பவ இடத்தை புலனாய்வு அலுவலர் அ.சா.10 பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயாரித்த போதும் கைப்பற்றுதல் மகஜர் மூலம் சம்பவ சமயம் எதிரிகள் பயன்படுத்திய உடைந்த பீர்பாட்டில் ஒன்றை

கைப்பற்றிய போதும் உடனிருந்து பார்வை மகஜரிலும் கைப்பற்றுதல் மகஜரிலும் சாட்சி கையொப்பமிட்ட அ.சா.5 சிவானந்தம், அ.சா.6 சண்முகம் ஆகியோரும் பிறழ்சாட்சிகளாக மாறிவிட்டார்கள். மேற்படி பிறழ்சாட்சிகளின் சாட்சியத்திலிருந்து அரசு தரப்புக்கு ஆதரவாக எடுத்துக் கொள்ள ஏதும் இல்லை.

19. இவ்வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த அ.சா.7 கோவிந்தன் என்ற சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் சாட்சியத்திலிருந்து எதிரிகளுக்கு எதிரான குற்றம் குறித்து ஏதும் தெரியவரவில்லை. அது போல அ.சா.9 தமயந்திராணி தனது சாட்சியத்தில் அ.சா.1 முருகேசன் என்பவருக்கு இடது புருவத்தில் தையல் இட்ட காயம் இருந்ததாகவும் அவர் வேறு ஒரு தனியார் மருத்துவமனையில் தீபக் என்ற மருத்துவரிடம் ஏற்கனவே சிகிச்சை பெற்றுள்ளார் என்றும் கூறியுள்ளார். அவருடைய சாட்சியத்திலிருந்து 1 முதல் 5 எதிரிகளுக்கு எதிரான குற்றச்சாட்டுகள் குறித்து நிரூபிக்கதக்க ஆதாரம் ஏதும் இல்லை.

20. இவ்வழக்கில் எஞ்சியிருக்கும் சாட்சியான அ.சா.10 ஆல்பர்ட் என்ற புலனாய்வு அலுவலர் அரசு தரப்பு வழக்கு குறித்து விரிவாக சாட்சியம் அளித்துள்ளார். எவ்வாறாயினும் சம்பவத்தில் பாதிக்கப்பட்ட

சாட்சியாக விசாரிக்கப்பட்ட அ.சா.1 மற்றும் சம்பவத்தை கண்ணுற்ற சாட்சிகளாக விசாரிக்கப்பட்ட அ.சா.2 முதல் அ.சா.4 மற்றும் அ.சா.8 ஆகியோரும் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயாரிக்கப்படும் போது புலனாய்வு அலுவலர் அ.சா.10 ஆல்பர்ட் என்பவருடன் இருந்து பார்வை மகஜரில் சாட்சி கையொப்பம் இட்டு கொடுத்தது குறித்தும் எதிரிகளால் சம்பவ சமயம் பயன்படுத்தப்பட்டதாக கூறப்படும் அ.த.சா.பொ.1 உடைந்து போன பீர் பாட்டில் கைப்பற்றுதல் மகஜர் மூலம் கைப்பற்றப்படும் போதும் உடனிருந்து கைப்பற்றுதல் மகஜரில் சாட்சி கையொப்பமிட்டு கொடுத்தது குறித்தும் விசாரிக்கப்பட்ட அ.சா.5 சிவானந்தம் மற்றும் அ.சா.6 சண்முகம் ஆகிய சாட்சிகளும் பிறழ்சாட்சிகளாக மாறிவிட்ட நிலையில் புலனாய்வு அலுவலர் அ.சா.10ன் சாட்சியத்தை மட்டுமே கருத்தில் கொண்டு 1 முதல் 5 எதிரிகள் குற்றவாளிகள் என்று முடிவு செய்ய இயலாது. எனவே சந்தேகத்தின் பலனை 1 முதல் 5 எதிரிகளுக்கு வழங்கி 1 முதல் 5 எதிரிகள் குற்றவாளிகள் அல்ல என்று முடிவு செய்து 1 முதல் 5 எதிரிகளை விடுதலை செய்து தீர்ப்பளிப்பதே நீதிக்கு உகந்தது என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

21. முடிவில், 1வது எதிரி மீதான பட்டியல் இனத்தவர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமைகள் தடுப்பு) சட்டப்பிரிவுகள் 3(1) (r), (s) மற்றும் இதச பிரிவுகள் 148, 324, 341 மற்றும் பட்டியல் இனத்தவர் மற்றும் பழங்குடியினர் வன்கொடுமைகள் தடுப்பு சட்டப்பிரிவு 3 (2) (va)ன் படியும், 2 முதல் 5 எதிரிகள் மீதான பட்டியல் இனத்தவர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமைகள் தடுப்பு) சட்டப்பிரிவுகள் 3(1) (r), (s) மற்றும் இதச பிரிவுகள் 148, 341 மற்றும் பட்டியல் இனத்தவர் மற்றும் பழங்குடியினர் வன்கொடுமைகள் தடுப்பு சட்டப்பிரிவு 3 (2) (va)ன் படியுமான குற்றச்சாட்டுகள் தகுந்த சாட்சிய சான்றாவணங்கள் மூலம் சந்தேகத்திற்கு இடமற்ற வகையில் நிரூபிக்கப்படவில்லை என்று முடிவு செய்து சந்தேகத்தின் பலனை 1 முதல் 5 எதிரிகளுக்கு வழங்கி 1 முதல் 5 எதிரிகளை குவிமுச பிரிவு 235(1) பிரிவின் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. 1 முதல் 5 எதிரிகளால் எழுதிக் கொடுக்கப்பட்டிருக்கும் பிணை பத்திரங்களை ரத்து செய்யவும் உத்தரவிடப்படுகிறது. இவ்வழக்கில் அரசு தரப்பில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள சேலம் முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்ற சி.பி எண் 55/2021 ல் உள்ள வழக்கு சொத்தான பாதி உடைந்த பீர்பாட்டில் (அதசாபொ.1) பயனற்றது.

எனவே அதனை மேல் முறையீட்டு காலத்திற்கு பின் அழித்து விடவும் உத்தரவிடப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, இன்று 2026ஆம் ஆண்டு, மார்ச் மாதம் 12ஆம் நாள் என்னால் அவையறிய பகரப்பட்டது.

S.JEYASINGH Digitally signed by S.JEYASINGH Date: 2026.03.12 19:17:40 +0530

**அமர்வு நீதிபதி,**
**பட்டியல் இனத்தவர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமைகள் தடுப்பு) சட்டத்தின் கீழான வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம்,**
**சேலம்.**

**பின் இணைப்பு –**

**அரசு தரப்பு சாட்சிகள் –**

| **சாட்சி எண்** | **சாட்சிகளின் பெயர் விவரம்** | **சாட்சிய விவரம்** |
|---|---|---|
| அ.சா.1 | முருகேசன் | வாதி/ பாதிக்கப்பட்ட சாட்சி |
| அ.சா.2 | கேசவன் | சம்பவத்தை கண்ணுற்ற சாட்சி |
| அ.சா.3 | செல்வராஜன் | சம்பவத்தை கண்ணுற்ற சாட்சி |
| அ.சா.4 | சிவசக்தி | சம்பவத்தை கண்ணுற்ற சாட்சி |
| அ.சா.5 | சிவானந்தம் | பார்வை மகஜர் மற்றும் கைப்பற்றுதல் மகஜர் சாட்சி |
| அ.சா.6 | சண்முகம் | பார்வை மகஜர் மற்றும் கைப்பற்றுதல் மகஜர் சாட்சி |
| அ.சா.7 | கோவிந்தன் | முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த சிறப்பு காவல் உதவி ஆய்வாளர். |
| அ.சா.8 | மாரியப்பன் | சம்பவத்தை கண்ணுற்ற சாட்சி |

| | | |
|---|---|---|
| அ.சா.9 | தமயந்திராணி | அ.சா.1க்கு சிகிச்சை வழங்கிய மருத்துவர். |
| அ.சா.10 | ஆல்பர்ட் | வழக்கை புலன்விசாரணை செய்து இறுதிஅறிக்கை சமர்ப்பித்த புலன்விசாரணை அலுவலரான காவல் துணை கண்காணிப்பாளர். |

**அரசு தரப்புச் சான்றாவணங்கள்—**

| **சான்றாவணங்–களின் எண்.** | **சான்றாவணங்களின் விவரம்** | **யார் மூலம் குறியீடு செய்யப்பட்டது.** |
|---|---|---|
| அ.த.சா.ஆ.1 | புகார் வாக்குமூலத்தில் உள்ள அ.சா.1ன் கையொப்பம் மட்டும் | அ.சா—1 |
| அ.த.சா.ஆ.2 | பார்வை மகஜரில் உள்ள அ.சா.5ன் கையொப்பம் மட்டும் | அ.சா—5 |
| அ.த.சா.ஆ.3 | கைப்பற்றுதல் மகஜரில் உள்ள அ.சா.5ன் கையொப்பம் மட்டும் | அ.சா—5 |
| அ.த.சா.ஆ.4 | பார்வைமகஜரில் உள்ள அ.சா.6ன் கையொப்பம் மட்டும் | அ.சா—6 |
| அ.த.சா.ஆ.5 | கைப்பற்றுதல் மகஜரில் உள்ள அ.சா.6ன் கையொப்பம் மட்டும் | அ.சா—6 |
| அ.த.சா.ஆ.6 | புகார் வாக்குமூலம் | அ.சா—7 |
| அ.த.சா.ஆ.7 | முதல் தகவல் அறிக்கை | அ.சா—7 |
| அ.த.சா.ஆ.8 | அ.சா.1ன் காயத்தின் தன்மை குறித்த கருத்துரையுடன் கூடிய விபத்து பதிவேடு நகல் | அ.சா—9 |
| அ.த.சா.ஆ.9 | சேலம் மாநகர தெற்கு காவல் துணை ஆணையாளர் அவர்களின் C.No.10/SC&ST Act/DC(L&O)/SLM(C)/2021 dated 05.11.2021 படியான செயல்முறை ஆணை | அ.சா—10 |
| அ.த.சா.ஆ.10 | பார்வை மகஜர் | அ.சா—10 |
| அ.த.சா.ஆ.11 | மாதிரி வரைபடம் | அ.சா—10 |

| | | |
|---|---|---|
| அ.த.சா.ஆ.12 | கைப்பற்றுதல் மகஜர் | அ.சா–10 |
| அ.த.சா.ஆ.13 | படிவம் 91 | அ.சா–10 |
| அ.த.சா.ஆ.14 | அ.சா.1 முருகேசன் என்பவரின் சாதி சான்றிதழ் | அ.சா–10 |
| அ.த.சா.ஆ.15 வரிசை. | 1 முதல் 5 எதிரிகளின் சாதி சான்றிதழ்கள் | அ.சா–10 |

**<u>அரசு தரப்புச் சான்றுப் பொருள்–</u>**

| **சான்று பொருள் எண்** | **சான்று பொருள் விவரம்** | **யார் மூலம் குறியீடு செய்யப்பட்டது.** |
|---|---|---|
| அ.த.சா.பொ.1 | பாதி உடைந்த பீர் பாட்டில் | அ.சா.10 |

**<u>எதிரிகள் தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள், சான்றுபொருட்கள்</u>**–இல்லை

S.JEYASINGH Digitally signed by S.JEYASINGH Date: 2026.03.12 19:17:47 +0530

**அமர்வு நீதிபதி,**
**பட்டியல் இனத்தவர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமைகள் தடுப்பு) சட்டத்தின் கீழான வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம்,**
**சேலம்.**